**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.90/2017**
**வழக்கு சாட்சி PW – 12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரதாபன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 03rd, 2024.

**(2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை. 1ம் எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தூத்துக்குடி மண்டல கடலோர பாதுகாப்பு குழுமத்தின் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.10.2015ம் தேதி, மதியம் 12.00 மணியளவில் நான் செங்கோட்டை வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, நிலைய சார்பு ஆய்வாளர் திரு.ஜெயசங்கரன் அவர்கள் பதிவு செய்த குற்ற எண்.235/2015, சட்டப்பிரிவுகள் 294(பி) மற்றும் 307 இதச வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவயிடத்திற்கு அன்றைய தினம் 13.00 மணியளவில் சென்று சாட்சிகள் ஜேம்ஸ் மற்றும் ஜோசப் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.11. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.12 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. பின்னர் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அப்பால் சாட்சிகள் அரசமுத்து, ராஜசேகர், பழனி, ஆதிநாராயணன், கணபதி, ஜெயபால் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் ஜேம்ஸ் மற்றும் ஜோசப், வழக்குப்பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.ஜெயசங்கரன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் மாலை 16.00 மணிக்கு இந்த வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகளை செங்கோட்டை வல்லம் சிலுவை முக்கு அருகில் வைத்து கைது செய்தபோது, சாட்சிகள் அசோக் மற்றும் பண்டிட்மோதிலால் ஆகியோர்கள் முன்னிலையில் இந்த வழக்கின் 1ம் எதிரி குமார் என்ற பசுபதிகுமார் என்பவர் எந்தவிதமான அச்சுறுத்தலுமின்றி ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அவர் தனது குற்றத்ததை ஒப்புக்கொண்டு, குற்றச்செயலுக்கு பயன்படுத்திய ஆயுதத்தை தன்னை அழைத்துச் சென்றால் எடுத்து ஆஜர்படுத்துவதாக கூறியதன் பேரில், பழனிக்குமார் வீட்டின் அருகேயுள்ள ஒரு செல்போன் டவர் அருகே அதன் அடியில் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய சுமார் 12 செ.மீ கைப்பிடியுடன் 69 செ.மீ இரும்பு கைப்பாகமும் ஆக மொத்தம் சுமார் 81 செ.மீ கொண்ட ஒரு வாளை அதே சாட்சிகள் முன்பு ஆஜர்படுத்த அத்தாட்சி தயார் செய்து, கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.13. அத்தாட்சி அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் நிலையம் வந்து, முறைப்படி எதிரிகளை தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து பி.ஆர்.எண்.346/2015 ஆக பெற்றேன். படிவம் 91 அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.10.2015ம் தேதி இந்த

வழக்கின் சட்டப்பிரிவினை 294(பி) மற்றும் 307 இதச லிருந்து 294(பி), 323, 324, மற்றும் 307 இதச – ஆக மாற்றம் செய்தேன். பிறகு 20.10.2015ம் தேதி சம்பவத்தில் காயம்பட்ட உள்நோயாளியாக இருந்து, வெளியில் வந்த ஸ்டிபன்சன் ராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 05.11.2015ம் தேதி காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த எலும்புமுறிவு மருத்துவர் திரு.ரமேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவர் கொடுத்த அறிக்கையின் படி 11.11.2015ம் தேதி இந்த வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(பி), 323, 326, மற்றும் 307 இதச வின் படி சட்டப்பிரிவுகளை மாற்றம் செய்து, அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே காயம்பட்ட நபருக்கு முதல் சிகிச்சை அளித்த மருத்துவர் கங்காதேவி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது புலன் விசாரணையை முடித்துக்கொண்டு, 11.11.2015ம் தேதி எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 326, மற்றும் 307 இதச வின் படி குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.